## Media Cell (PRO)








A Business Initiative

**Dhirajlal Gandhi college of Technology**

Dhirajlal Gandhi college of Technology received a very prestigious national award Promising Higher Educational Institute for Employ-ability Skills in India at New Delhi during the Industry Academia Integration Conclave 2021 hosted by Federation for World Academics (FWA) in association with Education Post (EP) recently. This award was in appreciation of DGCT for successful placement record of more than 2000 students in the past 5 years in the premier companies like Infosys, TCS, Wipro,CTS and Byjus etc., Mrs. Archana Manojkumar, secretary, DGCT,received the award from the honorable Mr.Suresh Prabhu MP at New Delhi. Dr.smirt kaur, Principal of SRCS and Shri Surendranth Tripathi IAS, Director General IIPA were the guest of honor who addressed about the New Education Policy and the importance given to Industry Institute Interaction.



**தீரஜ்லால் காந்தி காலேஜ் ஆப் டெக்னாலஜியில் இணையவழி பயிற்சி**

சேலம், டிச.14:திரஜ்லால் காந்தி காலேஜ் ஆப் டெக்னாலஜி இன்ஸ்டிடியூஷன்ஸ் இனோவேஷன் கவுன்சில் மூலம், டிஜிபி டாக்டர் சைலேந்திர பாபு தலைமையில் ஒவ்வொரு மனிதனுக்கும் தனி மனித அடையாளம் தேவை என்ற நோக்கத்தில் இணைய வழி மாணவ, மாணவிகள் மற்றும் பேராசிரியர்களுடன் உரையாடினார். கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வராஜ் வரவேற்றார். டாக்டர் சைலேந்திரபாபு ஐபிஎஸ் பேசுகையில், 'வாழ்க்கை கடினமானது. பலமுறை தோற்றாலும், தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். நீங்கள் வெற்றி கொள்ளும் வகையில் உழைக்க வேண்டும் என்றார். தொடர்ந்து மாணவ மாணவிகளின் கேள்விகளுக்கு விளக்கமளித்தார். கல்லூரி செயலர் அர்ச்சனா மனோஜ்குமார் மற்றும் துணை முதல்வர் டாக்டர் வெங்கடேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாணவி ஜெயச்சந்திரபிரபா நன்றி கூறினார். பிளேஸ்மென்ட் டைரக்டர் டாக்டர் பார்த்தசாரதி மற்றும் மெக்கானிக்கல் துறை பேராசிரியர் டாக்டர் பரந்தாமன் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். ...

டிஜிபி சைலேந்திரபாபு.



திரஜ்லால் காந்தி தொழில் நுட்ப கல்லூரியில்

**வானமே எல்லை இணைய வழி பேச்சு**

சேலம், டிச.23: திரஜ்லால் காந்தி தொழில்நுட்ப கல்லூரியில் மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில், வானமே எல்லை என்ற தலைப்பில் கோவில்பட்டி கே.ஆர். கலை அறிவியல் கல்லூரி தமிழ் பேராசிரியை செல்வமுத்துமாரி பேசினார். நம்பிக்கை, இலக்கு, நேர மேலாண்மை ஆகியவை வெற்றிக்கான மந்திரங்கள் என்பதை விளக்கினார். நிகழ்ச்சியில் டீன் டாக்டர் தில்லைக்கரசி அனைவரையும் வரவேற்றார். கல்லூரி செயலர் அர்ச்சனா மனோஜ்குமார், கல்லூரி முதல்வர் செல்வராஜ், துணை முதல்வர் டாக்டர் வெங்கடேஷ் ஆகியோர் வாழ்த்தி பேசினர். ஏற்பாடுகளை பேராசிரியைகள் சசிகலா, தீபா ஆகியோர் செய்திருந்தனர். மாணவிகள் லிப்ரா, பிரதிஷா, வாணி தொகுத்து வழங்கினர். மாணவர் ஸ்ரீராம் நன்றி கூறினார். ...



விளையாட்டு போட்டியில் சாதனை

**திரஜ்லால் காந்தி தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கு பாராட்டு**

அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் நடைபெற்ற மண்டல அளவிலான விளையாட்டு போட்டியில், சாதனை படைத்த திரஜ்லால் காந்தி தொழில்நுட்பக் கல்லூரி மாணவ- மாணவிகளுக்கு நிர்வாகிகள் பாராட்டு தெரிவித்தனர்.

சேலம், மே 4: திரஜ்லால் காந்தி தொழில்நுட்பக் கல்லூரியில், அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் ஆண் மற்றும் பெண்களுக்கான 7வது மண்டல அளவிலான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதில், பல்வேறு பொறியியல் கல்லூரிகளின் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றனர். போட்டியில் திரஜ்லால் காந்தி கல்லூரி மாணவ -மாணவிகள் இரண்டாமிடம் பிடித்து, சாம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றனர். வெற்றி பெற்ற மாணவ -மாணவிகள் மற்றும் உறுதுணையாக இருந்த திரஜ்லால் காந்தி கல்லூரி உடற்கல்வி இயக்குனர் விஸ்வநாதன் ஆகியோருக்கு, கல்லூரி சேர்மன் மனோஜ்குமார் காந்தி, கல்லூரி செயலர் அர்ச்சனா மனோஜ்குமார், கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வராஜ், துணை முதல்வர் டாக்டர் வெங்கடேஷ் மற்றும் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் பாராட்டு தெரிவித்தனர். ...

தினகரன் Tue, 04 May 2021
https://epaper.dinakaran.com/c/60229241

**Dr.N.Thillaikarasi**

(Dean - Student Affairs) | PRO